உ

கணபதி துணை.

மறைசையந்தாதி.

யாழ்ப்பாணத்து நல்லூர்

சின்னத்தம்பிப்புலவர்

அருளிச்செய்தது.

இஃது

ஸ்ரீ நல்லூர்

ஆறுமுகநாவலரால்

பலபிரதிரூபங்களைக்கொண்டு பரிசோதித்து

இவர்மாணாக்கர்களுளொருவராகிய

மேற்படியூர், கனகசபாபதிப்பிள்ளை குமாரர்

சதாசிவப்பிள்ளையால்

சென்னபட்டணம்

கலாநிதி யச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம்பதிப்பு.

கணபதி துணை.

மறைசையந்தாதி.

காப்பு.

அந்தர மாதியு மில்லா மறைசையி லத்தர்தம்மேற்
செந்தமிழ் நூற்பொரு ளந்தாதி பாடச் சிலம்பிலன்னை
யிந்தன வொழுகுஞ் சுந்தரி யம்பிகை யின்றெடுத்த
சுந்தர விரகத் திச்சே தகன்றாட் டுணை துணையே.

திருவா ரணங்கு மணமகனா புரிந்த செல்வர்வெள்ளைக்
கருவா ரணங்குமி ழும்பண்ணை சூழ்மறைக் காடரிசை
மருவா ரணங்கு தினையாளைப் பாடுமென் வாய்க்கவிதைக்
கிருவா ரணங்குசெய் புண்டூலைப் பாமயி லென்றுணையே.

என்று டலையொன்று காலனைத் தாக்கி யெழிற்கனக
மன்று டலைச்செய்து வான்பர வைப்பெயர் மண்ணுறும்விண்ணுறுஞ்
சென்று டலைக்கடை வாயிற் படியினுஞ் சேர்ந்துவைகு
முன்று டலைவைப் பதுமறைக் காட்டி லுறைபரனே.

பாமரம் பாவினைச் செம்பவ ளக்கொடி பக்கர்சுரும்
பாமரம் பானை யெரிந்தார் மறைசைப் பதியர்வரிப்
பிரமரம் பாடிய பொற்கொன்றைத் தாமரைப் போதியோர்
தரமரம் பாவிநெஞ் சேவினை யாங்கருந் தாதினுக்கே.

கருந்தாதை யன்ன கயவர்தம் மீதிற் கவிதைசொல்லி
வருந்தாதை யானனன் வேதா ரணியன்னை வேற்குகனைத்
தருந்தாதை தெய்வ மணங்கமழ் சேவடித் தாமரைமேற்
பொருந்தாதை யோநினை வில்லாவென் சித்தப் பொறிச்சுரும்பே.

சுரும்பர வைக்கிசை தாமரை யோபெருந் தொல்புவியோ
சுரும்பர வைக்கண் ணியலேது தூதிருட் காலமுல்லை
யரும்பர வைப்பரி லும்வா ணகையல்கு லன்னமென்ன
வரும்பர வைக்கு நடந்தார் மறைசை வரையிறையே.

வரைச்சங் கரிக்கு மணவாளர் கூடல் வளர்ந்திடுமூ
வுரைச்சங் கரிக்கு வனஞ்சூழ் மறைசையி லுத்தமனா
தரைச்சங் கரிக்கு விடப்பாணி சக்கரந் தானைதொட்ட
திரைச்சங் கரிக்குந் தெரியாப் பதநிழல் சேர்மின்களே.

மின்னஞ்சு கங்கைச் சடாதரன் சத்த விடங்கன்றிரை
வன்னஞ் சுகந்தவன் மாமறைக் காடற்கு மாதொரிராப்
பன்னஞ் சுகமென வேள்காம காண்டப் பாழியிறை

தத்தலை வேலையன் காணாத வேதத் தனிவனத்து
முத்தலை வேலையன் வெற்பினம் மாது முளரியடி
யத்தலை வேலையன் மூட்சொரி பாலை யருஞ்சுரத்து
வைத்தலை வேலையன் பாலென்னை நாடி வரவெண்ணுமே.

வரபர சங்கர வேதா ரணிய மடங்கலஞ்சுஞ்
சரபர சங்கர ளம்பொதி வாய்விழித் தையல்பங்கி
னரபர சங்க ரவிபோ லொளியி னணிதிகழும்
புரபர சங்கர வாகம ஞர்வரும் போதத்திலே.

போத வனந்த னவிராழி விற்கதை பூட்டுசிலை
மாத வனத்தன் மறுதிக்கெட் டாத வாதனங்கி
யாத வனந்த நகுமதி மூன்றுக ணைம்பொறியார்
வேத வனத்தன் பதம்பேணிற் பாச விலங்கறுமே. ௧௦

விலங்க லரிக்குலஞ் சூழ்மறைக் காடன் விரிந்ததுழா
யலங்க லரிக்கரு மாலுரி லோர்புற் றமர்ந்திருக்கு
விலங்க லரிக்கட் களக்கறை யானைச்சற் றெண்ணுநெஞ்சே
கலங்க லரிக்குநந் தீவினை யான கருங்கலையே. ௧௧

கருங்கலை மானுமென் சித்தா சனம்புகுங் கண்ணுதலோ
னருங்கலை மானுறை வேதா ரணிய னணிவரைமேன்
மருங்கலை மாறுதிக் கண்முலை யிருங்கள் வார்தடங்கண்
பொருங்கலை மானென்று வந்ததுண் டாகிற் புகன்றிடுமே. ௧௨

புகரானை யிரு முரியானை வெண்பொருப் பானையெண்ணம்
பகரானை மேய்த்துவெண் பற்றானை யாழ்கைப் பகட்டைக்கவ்வி
யகரானை யச்சுட ராழிதொட் டாற்கரி யானைமறை
நகரானை யன்றிச் சொலாதிறைஞ் சாதென்ற னுச்சிரமே. ௧௩

சிரவா விந்தம் புனைமறைக் காடத்ரி சூலங்கொண்ட
கரவா விந்தம் பணித்தோன் மலைத்தென்றற் கன்றுயிர்க
வரவா விந்த மடநடைக் கோமள வஞ்சியிரு
ளிரவா விந்த மெனக்கிடந் தாள்பின்னை யென்செய்வளே. ௧௪

செய்யரைக் கோடியன் மாவுரி யாரைச் செழுங்கனன்மான்
கையரைக் கோடி புனைமறைக் காடரைக் கண்ணிற்கண்டாற்
பையரைக் கோடிமின் னார்மய லால்வரும் பாவமெல்லா
மையரைக் கோடி யருந்துக ளாகு மறிசித்தமே. ௧௫

சித்திர வன்னி கருங்கொங்கை பங்கர்செற் றார்புரமூன்
றத்திர வன்னிக் கருணைகை யார்க்கிட மாகமநூன்
மித்திர வன்னியும் பூவையுங் கேட்டு வியந்துரைக்கும்
பத்திர வன்னி மரஞ்சேர் மறைசைப் பதியகமே. ௧௬

பதிகம் பரிக்குங் குழன்மாத ராயப் பரவையுள்ளே
வதிகம் பரிக்கு நிகர்விழி யாய்மலை மாதுகங்கா
ளிதிகம் பரிக்கு மணியாக நீந்தரு ளிசர்மூத்தட்
பொதிகம் பரிக்

புரியா ரநந்த னடியாப் பதம்பெறப் பொற்கயிலைப்
பெரியா ரனந்தனை வென்னடை பாகர் பிறப்பினிலங்
குரியா ரனந்த வளமறைக் காட்டைக் குறித்திருந்து
மரியா ரனந்தன் சிரமேற் புவித்தல மானவரே. ௧௮

மானத் தரக்கரந் தைப்பட வீர்த்துரி வாங்கினர்கற்
றானத் தரக்க ரரசுட்க வூன்றிய தாளர்குடப்
பானத் தரக்கர விந்தத்தின் மேற்றுயில் பண்ணைமறைக்
கானத் தரக்கர மைந்துணர் வீர்வினைக் கட்டறுமே. ௧௯

அறுத்தவித் தாரச் சமைத்தபின் னோக்குசக் தார்பொதியங்
குறுந்தவித் தார முனிக்கருள் சோலை குழசரராப்
பொறுத்தவித் தாரணி யேத்தா ரணபுரம் போந்துகரு
வறுத்தவித் தாக்குவ தல்லாது வேறு மருந்தில்லையே. ௨௰

மருக்கர விரயின் றேநினைக் காவொன்று மன்றுறையெல்லா
முருக்கர விர வாவிவிழி யாய்கட முற்றனைவங்
திருக்கர வீரகத திச்சேச தகன்றந்தை யிர்மறைசை
யெருக்கர வர மயம்வலரி வெற்பி னெறிபியன்றே. ௨௧

அன்றுலவி றைட்டந் தூயின்றே னிகரன்னை லேதிருமான்
பொன்றுலவி நாட்டநந் சுண்டார் மறைசைப் பொருப்பகத்தி
லொன்றுலவி நாட்டவற் கார்போலும் வார்குழ லொண்டொடியூர்
குன்றுலவி நாட்டவர் கொள்ளா ருனது குளிர்முத்தமே. ௨௨

முத்திரு மாதங்க வார்முலை பாகர் முதுமறைசை
மெய்த்திரு மாதங்க மாற்கரி யானை விளம்புதிலீர்
பத்திரு மாதங் கருவழி யூறிய பாழுடம்பை
வைத்திரு மாதங்கத் தென்றிசைக் கூற்று வருங்கடைக்கே. ௨௩

வருகர நாக மகவான் பதமும் வனசப்பிரான்
பொருகர நாகம் பிளந்தான் பதமும் புகலின்மிக்கோர்
முருகர நாகர் பணிமா முகரத்தன் மூவர்தமிழ்க
குருகர நாக மருங்குழை யாற்பணி யொண்டவாகமே. ௨௪

ஒண்டுதை யுண்புற வீர்மறந் தாரேம தூரார்முன்றுண்
மண்டுதை யாக்கிய சோழீந் திடமிழ்ந் தார்வரம்பி
னண்டுதை யால்வெயில் காய்மறைக் காட்டுறை நாகமணி
வண்டுதை யோதிக்குச் செம்பாதி யாகி மணிவளைக்கே. ௨௫

மணிக்குட நாடகன் மாறன் பதாகை வரித்தருதற்
கணிக்குட னாடக வாழுமென் றூவிம்மை காயமையற்
பிணிக்குட னாடகப் பொற்கொன்றை யாயரும் பெருமறைசை
யணிக்குட நாடக மால்பணி யாதி யரனிடத்தே. ௨௬

இடங்கர டக்கய மேனின்று கூப்பிட் டிரங்குமந்தத்
தடங்கர டக்கயங் காத்தோன் சரமனைத் தையல்கன்ம
கடங்கர டக்கய மேமுகு நான்மறைக் கான்புவனி

மேல்வின்றி நாயக னில்லார் மறைசை விமலரிடப்
பால்வின்றி வேதன் வலப்பாலு மாகப் படைத்தவர்வா
யால்வின்றி நாவிரை சுற்றுஞ் சிலம்பிக ராசனித்த
போல்வின்றி முத்தருங் கொள்ளாரென் னாற்கவிப் புன்சொல்லுமே. ௨௮

புன்றாக வெளி மறைக்காட ரன்பனைப் புண்டரிக
மின்றாக மாயவ னன்முகன் வாசவன் மேற்பதிக்கு
மன்றாக வைப்பவர் காட்டோடு மாடு மகிழ்ந்துபுன்றோல்
பன்றாக நற்சுடை பூணாண தாகப் படைத்தவரே. ௨௯

படைக்கந் தரந்தர் திருமறைக் காடர் பனிவரைமே
லடைக்கத் தரத்த திறத்தா மறைமுகத் தன்னமன்றே
டொடைக்கந் தரக்க மருந்தரு மோதிச் சுரும்பினங்கா
விடைக்கந் தரம்வரி னுங்கனந் தேபழி யேற்றுமே. ௩௦

எற்றுக் கொடியர் திருமறைக் கானத்த ரேழுலகப்
பேற்றுக் கொடியத்தர் திக்காடை நாதரைப் பேணிக்கொண்டேன்
கூற்றுங் கொடியற்ற மஞ்சே னினியிக் குவலயத்தே
தோற்றுக் கொடிவரை சேதன யாதுந் தொலைந்தனளே. ௩௧

தொலைவே தனையர் கருக்குழி வாய்ப்படுந் தொல்லைச்சென்ம
மிலைவே தனையென் றழலூசல் போல நினையுநெஞ்சி
னுலைவே தனைய வொருகாலந் தேலென் றுரைக்கினென்றுங்
கலைவே தனையன் பணிமறைக் காடனென் கண்முனின்றே. ௩௨

கண்ணச் சிராக வரிகுழுங் காமறைக் காடர்செந்தீ
வண்ணச் சிராசல மேருவில் லாளி வரைவிடுதே
நுண்ணச் சிராக விழிந்தால வேலுறை விட்டுவிட்டுப்
பெண்ணைச் சிராள்வல வாவிறங் காது பிடியன்னமே. ௩௩

அன்னம் பலவ நறும்புன்னைச் சேக்கை யமர்மறைசை
முன்னம் பலவன் முடித்த சடாதர மூர்த்திதில்லைப்
பொன்னம் பலவன் பிறைதங்கு காளன் புராந்தகன்சீர்
வன்னம் பலவன் பசுபதி நாதனென் வான்றுணையே. ௩௪

வானப் பிறையையும் வாடைப் புலியையு மையல்செய்யுந்
தேனப் பிறையையுந் தென்றலை யுங்கண்டு சில்லரிக்கண்
மீனப் பிறைநுதன் மடமானை மேவிலர் வேடனிடு
மூனப் பிறைச்சிக் குகந்தார் மறைசை யுகந்தவரே. ௩௫

உகந்தா வடிக்கு மிடையார்தம் பாலனை யுண்டுகடற்
சகந்தா வடியானுங் கெட்டாத ஞானத் தலத்துமுத்திச்
சுகந்தா வடிதமிழ் நான்மறைக் காட னுணைவரியம்
முகந்தா வடிசெல் குழையாண் மருவிய பாகத்தனே. ௩௬

ராக னகனி மொழியா யுனது பணிமுகமாங்
நாக னகநில வுந்துணைப் பானலிற் கோடல்கண்டே
நாக ககிரி ரும்புயிப் பாகரு நாடவனறு
மாக னையிலை மன்றுடி வேதவ னமலைக்கே. ௩௭

மலைக்கார் முகந்தர யானைப் பழிமொழி மான்குறையா
மிலைக்கார் முகமடி யானடியாக மனமறை காய்க்கந்திச்சுரு
முலைக்கார் முகந்தும் வேதா ரணிய வருந்துயராந்
தொலைக்கார் முகநதரி யென்சொல்லு வேனென்ன சொன்னதிலே. ௩௮

சொன்னச் சிலம்பு குழைத்தவில் லான்சுரு திப்பதியான்
வன்னச் சிலம்பிற் கரசளித் தான்வெற்பின் மானனிறைகண்
மின்னச் சிலம்பு கலைகளை யாமன்மெய் வேர்வரும்பச்
சின்னச் சிலம்படி யாய்குடைந் தாயொரு தேன்சுனையே. ௩௯

தேன்றதும் பிக்குளிர் தாமரைப் பீடிகைச் செல்வனும்வாய்
நான்றதும் பிக்கருண் மாயனும் வான்புவி நண்ணியநுங்
கின்றதும் பித்தவ ராற்கிட்டு மோகிடை யாதுலக
மின்றதும் பிக்குழல் சேர்மறைக் காட னிரண்டடியே. ௪0

இரண்டடந் தகரங் கிருந்தன்ன பார்வை யிளைக் கரும்பார்
புரண்டடந் தகர மனவிய கோதையைப் பொன்வில்லைவைத்தார்
முரண்டடந் தகரனை வேலா கடற்றிரை முத்தச்சரங்
குரண்டடந் தகர வெறிமறைக் காடன் குளிர்கிரிக்கே. ௪௧

விரிதா ரகையகலிந் தாலென்ன முத்தம் விடங்கொங்கை
யரிதார மன்னவ ளம்பாங் காட்டு மருக்கன்மதி
யெரிதார வெற்பு விழியா சனத்த னெழின்மறைசை
விரிதா ரகப்பொரு ளானே நுகர்ந்தவன் மெய்யொளியே. ௪௨

மெய்த்துத் தியான பணியா பரணன் விரைமருவுங்
கொத்துத் தியானஞ் செறிமறைக் காட்டுறை கோனையெண்ணிப்
பொய்த்துத் தியானம் புரிசெருக் கற்றுப் புலனடங்க
வைத்துத் தியான சமாதிசெய் வார்க்கில்லை வன்பிறப்பே. ௪௩

வன்போ தகவல் லியநெடுங் கான்சென்று மாப்புடம்பி
னென்போ தகவல் லியமா தவம்புரிந் தேனிலைப்பிர்
பொன்போ தகவல்லி யன்பார் சுருதி புரத்தபத்த
ரன்போ தகவல்லி யங்கொன்றை யாயென் றறைந்திடுமே. ௪௪

அறைக்கண் டவழரு விக்கிரி வேத வனத்தண்ணலே
மறைக்கண் டரிய பிரானிறந் தாரைப்பொன் மானதுய்த்துப்
பிறைக்கண்ட வேணியிற் பாணியும் பாணியிற் பேர்மழுவுங்
கறைக்கண்ட முங்கரச் செல்லுதல் பார்த்தி கருங்குழலே. ௪௫

கருமந் திரிகர ணம்வேறு மாறு கயவர்ப்பற்றித்
தருமந் திரியு மெனையாள்வை யோவெற்றித் தானவர்தம்
பெருமந் திரியை யுதரத்தில் வைத்த பிரானளகை
யொருமந் திரிநண்ப னேமறைக் காட்டுறை யுத்தமனே. ௪௬

உத்தம ரத்தி யுரியார் மறைசை யொருத்தர் வெள்ளோ
லத்தம ரத்தி னிறைகங்கை வேணிய ராலெரிந்த
நத்தம ரத்தி முராசான் செழுங்கலை நல்கமுன்னாள்
வைத்தம ரத்தின்மெய்த் தூரில்வெவ் நீர்விடு மங்கையரே. ௪௭

மங்கல மந்தர முன்றுக நின்கண்ட வண்ணங்கண்டு
சங்கல மந்தர வங்கொண்டு கூவிச் சுரிமுகஞ்சார்ந்
திங்கல மந்தர மத்தான் மையிற்பும் பிருந்ததுங்க
கங்கல மந்தர தம்புவி யான்மறைக் கானமின்னே. ௪௮

கானவண் டானக் களிற்றைவர்க் காகக் கழுவிற்றங்கு
மானவண் டானது காறுத தாமரை யாறுஞ்செவ்வி
ஞானவண் டானத் துறைவோனும் வாவியி னுடிக்கொத்து
மீனவண் டானந் திரிமறைக் காட்டுறை வித்தகனே. ௪௯

வித்தந் தியாக முதவா வுலோபர்க்கு விண்டிற்சொற்பாட்
டைத்தந் தியாக பதியென்ப ரான்முத லாம்பிள்ளையை
மைத்தந் தியாகப் பெறுமறைக் காடர் வயங்குமுண்மைச்
சித்தந் தியாகத் தியாகனைப் பாடிலர் தீங்கறவே. ௫௦

தீங்கரும் பாரஞ் சொரிவயல் வேதத் திருவனத்துக்
கோங்கரும் பார மணிமுலைச் சாமளக் கோமளப்பெண்
பாங்கரும் பாரண னுலாயு தாவிப் படிவச்சுமை
தாங்கரும் பார மினிப்பிற வாமுத்தி தந்தருளே. ௫௧

தந்தம் படைத்த களிறென்று தாக்கத் தளிபுரந்து
நந்தம் படைத்தலை வேல்விழிக் கன்னியை நோக்கியசா
னந்தம் படைத்தலைச் சால்வழி யூர்ந்திடு நான்மறைசை
யிந்தம் படைத்த சடையான்வெற் பாடவ ரெண்சிங்கமே. ௫௨

சிங்க முருக்குவன் றென்கால னுவியைச் செப்பிலின்னே
சங்க முருக்குர னுய்விருந் துண்ணக் கனத்திடுமென்
னங்க முருக்கும் பிணியங்கு மிங்கு மலையவைத்தாய்
பங்க முருக்கிதழ் சேர்மறைக் காட்டுறை பண்ணவனே. ௫௩

பண்ணை முதலையின் சொல்லியங் காளன் பகைவிடம்வன்
கண்ண முதலையி னெயிலை யேவிய கண்ணனுயி
ருண்ண முதலையின் றேன்மறைக் காடனை யுண்டென்பதே
யெண்ண முதலையின் கானிடைப் பூவி லினிநெஞ்சமே. ௫௪

நெஞ்சத் திருக்கு மதிநீயைம் பூத நிலயமுநீ
கஞ்சத் திருக்கு மரிசேருங் கண்ணனெண் கண்ணனுநீ
வஞ்சத் திருக்கு மலமாயை நீங்கிய மாதவத்தோர்
தஞ்சத் திருக்கு வனத்துறை காரண தற்பரனே. ௫௫

தற்கோல மென்ற கனிவாயை வேட்டுத் தயங்குமணப்
பொற்கோல மென்றடி யேன்காண் குவன்புவி புக்கிடந்த
முற்கோல மென்றவி சம்புயன் போகி முதலமரார்
நிற்கோல மென்ற பொழுதால முண்ட நிருமலனே. ௫௬

நிருமல ரஞ்சனை சேய்பணி மாலத்தர் நீள்விசயற்
பொருமல ரஞ்ச நயந்திடும் வேத புரிவரைக்கோன்
மருமல ரஞ்சனை யன்னார் மழர்சொல் வருவர்வன்கண்
ணருமல ரஞ்சனை யாதொழி யாய்மதி யாய்மனமே. ௫௭

மனக்காக்கை மூவர் தமிழ்க்குயில் வாணியை வைத்தருளை
யுனக்காக்கை வஞ்ச வினையேன் புன்றுவி னுரைத்தமிழ்
பினக்காக்கை வாயி னுழுங்கூறச் சொல்லொக்குஞ் சேணுறுகிஞ்சச்
தனக்காக்கை நீட்டு மறைக்காட்டில் வாழ்சிவ சம்பானே. ௫௮

சம்பாதி யந்தச் சடாயுவும் போற்றுந் தலைவன்புரம்
வெம்பாதி யந்த மிலாமறைக் காடன் விளைக்குறல்சேர்
செம்பாதி யந்தன் சமயமல் லாது திரிகெந்தமே
நம்பாதி யந்தகர் பொல்லாச் சமயங்க ளானமெனவே. ௫௯

நன்றென் புலமைமந்தில் வாயொன்று மேகலை யாயிறைஞ்சிர்
மின்றென் புலவு சனையாக்கை நுந்துசுரன் மின்பொதியக்
குன்றென் புலவர்முன் றோர்கவி யாயிறுங் கூறியதால்
வன்றென் புலவனைத் தாக்கிய வேத வனத்தனையே. ௬௦

வனக்கோதை யோயு மறுகா லுவைத்துவண் டேன்பிறிந்த
கனக்கோதை யெனனித் திர்கரும் பாட்டிய கட்டு கல்லா
தெனக்கோதை வாரித் திருவே மயிமலி வொன்றுயிர்விற்
பனகோதை பால்விடுத் தான்மறைக் காடன் பணிவரைக்கே. ௬௧

பனிச்சந் திரனணி வேணியுந் தாங்குஞ்செம் பஞ்சிறடை
யனிச்சந் திரளன்னத் தூவிமிற் சேக்குமஞ் சீறடியாற்
றனிச்சந் திரவி னடந்தான் சிகர தளம்பொலிமே
இனிச்சந் திரவரை வில்லான் மறைசையிற் செங்குருவே. ௬௨

உருப்பவ ருசன வாய்த்தேரை யிற்பிணிக் குன்றுடைத்தேவர்
கருப்பவ நாச நதிமணி கன்னிகைக் கான்மறைசை
செருப்பவ முசன காதியர் தேசிக னீர்பதுமந்
திருப்பவ முசனப் பாற்கட லான்பணிந் தேத்திறையே. ௬௩

எத்திரப் பாண்டி யெனவைய மேற்கு மிறைவன்மதிக்
கோத்திரப் பாண்டிய னுமின்மு னுண்டவன் கோலங்களைக்
காத்திரப் பாண்டின் மறைக்கா டனைமலக் காயமென்னுந்
சூத்திரப் பாண்டி யிறுமிறுங் காலுந் தொழுமுன்னமே. ௬௪

முன்னுவ லாரிசை யுங்கூடற் சங்கர் முதியவெள்ளை
நன்னுவ லாரியன் மாமறைக் காடர் நயங்கொள்பச்சை
மின்னுவ லாரிவ ரைக்காண வேண்டும் விரிசதப்பத்
தென்னு வலாரி படைத்தா னவையு மிமைப்பிலவே. ௬௫

இமையாத வம்பகர் சூழ்மறைக் கானத் திறைவகங்கைச்
சுமையாத வம்பக வன்செயச் சென்னி துளக்கரனே
கமையாத வம்பகல் விசிய வாரிதிக் காசினியோ
ருமையா தவம்பக ரார்வேட னெச்சிலை யுண்டதற்கே. ௬௬

உண்டலத் தானையன் பின்வந்த வண்டின முதுந்துறாய்க்
கொண்டலத் தானைய னஞ்சுடர் மூன்றையுங் கொண்டமுக
மண்டலத் தானையன் கொண்டாடும் வேத வனத்தன்சிறு
கண்டலத் தானையன் றீருரி வாங்குங் கருணையெற்கே. ௬௭

எம்பதங் கன்று வளர்சோம னம்பி யிவர்செய்கையா
லிற்பதங் கன்று திருமறைக் காட னிறைவைகுண்ட
நற்பதங் கன்று நிரைமேய்ந் தவற்கரு ளுதன்பெண்பாற்
சிற்பதங் கன்று மெனச்சென்ற தூதன் செயல்வண்ணமே. ௬௮

வண்ணவெண் கண்ணன் மறையா ளுறைமறைக் காட்டிறைவர்
திண்ணவெண் கண்ணன் மதமாத் திரியுஞ் சிலம்பகம்பூ
வண்ணவெண் கண்ண னணையே நிதம்ப முயர்சுருதிப்
பண்ணவெல் கண்ணன் மனையே முகநண்ப பைந்தொடிக்கே. ௬௯

தொடிப்பாணி நித்திரை யாகாளென் காதிற் றுளைக்குமட்டோ
நொடிப்பாணி னித்தில தென்னும் விழுமழு நோமிப்பிவாய்
வொடிப்பாணி நித்தில மையோ சுடுமென்னும் வேதவன
முடிப்பாணி நித்தியப் பெம்மான் பவனி முறையிற்கண்டே. ௭௦

கண்டங் கடுத்தவி ராமலை வேதன் கழிந்ததலை
முண்டங் கடுத்த மிசைந்திடும் வானின் முளைத்தபிறைத்
துண்டங் கடுத்த நுதலிம யாசலத் துய்யபச்சைப்
பெண்டங் கடுத்து பார்மறைக் காட்டுறை பேரொளிக்கே. ௭௧

ஒளியா னிறையுந் திவாசரக் கண்ண னுலகத்துயி
ரளியா னிறையுந்தி யம்புயன் வேதற் கருந்தசின்மய
வெளியா னிறையுந்தி முந்நீர் மறைசையில் வெற்பணங்கே
தெளியா னிறையுந் திசைத்தங் கிரேன்வந்து சேருவனே. ௭௨

சேரு வரிக்கடை யாளமில் லாவுருச் சித்தசர்போ
லாரு வரிக்கடை பெறிம்ப ராலணங் கேசெழும்பூந்
தாரு வரிக்கடை பண்பாடும் வேதத் தலத்திறைமுந்
நீரு வரிக்கடை வெங்காள போசன னீண்மலைக்கே. ௭௩

நீண்ட வராக மலைமா நிலங்கிண்டி நின்றறியா
றெண்ட வராக மலைகுனித் தான்மறை நற்பதியான்
மாண்டவ ராக மலையாமல் வைப்பவன் வான்புகழை
வேண்டவ ராக மலைக்குமுன் றேன்றும் வெறுந்தௌவையே. ௭௪

வெறும்பத்தி நிச்சய மில்லேனை யாட்கொண்டு வீட்டில்வைப்பா
யுறும்பத்தி னிற்பத்து மாமகன் மாலய னும்பருக்கு
மெறும்பத்தி நிற்குங் கடைமுத லாவி யெவைக்குமருள்
பெறும்பத் தினிபங்க னேமறைக் கானப் பெருஞ்சுடரே. ௭௫

பெருக்கா சினித்தலங் கொண்டாடி யாடிப் பிறங்குசங்கை
யருங்காசி நித்த ராறைவோர் மறைசை யமலர்வெற்பின்
மருங்காசி னித்தலை கொள்ள விடாதென்ன மார்பகத்தே
பெருங்காசி னித்தனைப் பூண்கொங்கை மங்கைக்குப் பாரித்ததே. ௭௬

பாரிக்கு மார முலையுமை யாட்கும் பகீரதியா
ளாரிக்கு மாரப் புரமுஞ் சிரமு நயந்தளித்தான்
மூரிக்கு மாரனைத் தந்தான் மறைசையின் மூர்த்திதந்தான்
[illegible]

சாதிப்ப ராசம மென்பயன் வேட்டுவஞ் சாதிப்புழு
வேதிப்ப ராசம் பெறல்போல மெய்க்குரு வாற்பெற்றியான்
பூதிப்ப ராக மணிக்குன்ற ருவமைதப் போதருளா
யாதிப்ப ராகவி ருன்மறைக் காவுத்தெ ணம்புயனே. ௭௮

புயற்கூடு போம்பொழில் வேதா ரணியன்பொன் னுட்டகத்தே
மயற்கூடு மாடவர் காரிய ராருயிர் வாரியுண்ணு
முயற்கூடு தாக்க விருற்கூ டுடையு முடிச்சிலம்பா
கயற்கூடு கண்வளிடை யாகாசத் திட்டுதல் கைக்கரிதே. ௭௯

அரிகிரி னைக்கு வடிவாழ் மறைசை யரன்வறுமை
பெரிகிரி னைக்குவந் தாண்டான் மெய்ஞ்ஞானம் பிறங்குசுடர்
விரிகிரி னைக்கு வினையேயிடத்தில் விளங்குமட்சக்
கிரிகிரி னைக்கு நிகராம் பிறப்புங் கெடுவிப்பனே. ௮௰

கெடுப்போ னகங்கைதனை நான்முகன் கேசவ னர்க்குமுண்டோன்
கடுப்போ னகங்கையற் பங்கில்லைந் நான்மறைக் காணுவந்தா
னடுப்போ னகக்கை யுடையான் சிலம்பினம் மாதைமொப்பாய்
வடுப்போ னகங்கை மணிமுலை நின்குறை மற்றிலையே. ௮௧

மற்றலத் தேரைய மின்றிநெஞ் சேயென்ன மாயங்கொல்லோ
முற்றலத் தேரை விடுஞ்சாலிற் சங்க முழங்கு பண்ணைப்
பொற்றலத் தேரை மறைமறைக் கானப் புனிதன் கல்லுட்
பற்றலத் தேரைக்கு மேயளந் தானெப் படிப்படியே. ௮௨

படிகந் தனையனை யான்மறைக் காடன்பொற் பாணியில்வேல்
பிடிகந் தனையரு டாதைய னுடகப் போரவனைக்
கடிகந் தனைமுகில் காணுனை யேத்தக் கருதுநெஞ்சே
விடிகந் தனைய மடவார் கலக விழிமையலே. ௮௩

மையகற் றானை முகன்றனை மாலரிக்க வாசகனை
மெய்யகற் றானை மகிழ்மறைக் காடனை வேண்டியுன்னுந்
செய்யகற் றானைமுக் கோலத்த வீர்சுரஞ் சென்றனரோ
துய்யகற் றானைப் புரந்தானன் னுனுகந் தோகையுமே. ௮௪

தோகை யிராமன் மதன்பாண மங்கந் துளைத்ததுகா
ரீகை யிராமன் விதிகற்ப மானதென் மீதிற்சற்று
மோகை யிராமன் மறந்தா ரிராவண னுட்கவென்ற
வாகை யிராமன் பணிமறைக் காடர்வந் தாரில்லையே. ௮௫

வங்கித்திக் குங்கனை யுங்கொண்ட வேள்பணி மான்குழற்கா
டுங்கித்திக் குங்கனி வாயும்வெண் மூரலு மொண்குழையும்
பங்கித்திக் கும்பெறத் தோன்றிய வேதப் பதியன்பொற்று
ளங்கித்திக் குந்தகு மென்னமன் றுடு மரன்கிரிக்கே. ௮௬

அரம்பையங் காட்டக வேதா ரணியத்த னைவியச்சுக்
குரம்பையங் காட்டவல் லான்சித்த சித்தன் குரூஉச்சடில
சிரம்பையங் காட்ட வணிந்தோ னரவிந்தச் சேவடியன்
பரம்பையங் காட்ட வெளிமன்பன் காசப் புறங்கிடுமே. ௮௭

பறக்கும் பருந்துவக் குஞ்சரி யுன்றுடைப் பற்றுளதா
யிறக்கும் பருந்துவக் காக்கையை நீக்கி யினிப்பொதியா
வறக்கும் பருந்து தமிழ்மறைக் காட னருளொக்கொண்டு
துறக்கும் பருந்துயித் தற்கரி தாமுத்தித் தொல்கதவே. ௮௮

சதவாயு நீரங்கி மண்காய மான கடவுளெனை
யுதவாயு மப்பனு மானவன் வேத முறைவனத்தான்
பதவாயு தக்கொடி வேடாதை கீர்த்தியைப் பாடிதற்குச்
சதவாயு நாவுந்தந் தாளில்லை யாணி தலைமகனே. ௮௯

மாரா சலந்தர னக்கரு வேத வனத்தபய
சீகர சலந்தர ஞவியுன் பாடல்சே சர்க்கிலங்கு
மோகர சலந்தர வாலாச ஞுவுரி யங்கைபொற்றைப்
புகர சலந்தரப் போர்த்தா யெனவினை பொன்றிடுமே. ௯௦

பொன்றுதை யம்புயத் திண்கால னஞ்சிப் புரண்டுவிழ
நின்றுதை யம்புயத் தான்மறைக் காட னிருள்வெற்பிலி
ரொன்றுதை யம்புயங் கன்வாய் விழுங்கிய தோமகலித்தே
ரென்றுதை யம்புயன் மூடிய தோகின் றியம்பிடுமே. ௯௧

இயக்கோடை யாம்பன் முகருந்த னேத்து மிறைவனண்டு
முயக்கோடை யாம்பன் மலர்மறைக் கான்முத லேகருதிச்
சயக்கோடை யாம்பன்முத் தேயடி யேன்சட் டகம்விடுமுன்
மயக்கோடை யாம்பன் மருந்தேமின் பார்வை வழங்குதியே. ௯௨

குதிக்குஞ் சிதரிக் கட்கயற் பாவை கொழுநன்மன்றிற்
சதிக்குஞ் சிதநடக் தான்கொன்றை மாலை தவழ்குழவி
மதிக்குஞ் சிதங்கிய வேணியன் வேத வனத்தலத்தி
லுதிக்குஞ் சிதலை யெறும்பாதி பேற்றை யுரைக்கரிதே. ௯௩

உரைத்தென்ன வன்மை பரன்மறைக் கானுறை யோங்கன்முதி
னிரைத்தென்ன வன்மயி லூங்குழலா ளைஞ்சே னும்கரும்பைக்
கரைத்தென்ன வன்னைப் பூண்மார்பஞ் சேரக் கருதுபொதி
வரைத்தென்ன வன்கொடி சாடிய வேல்விழி வாணுகையே. ௯௪

வானண்ட ருண்டி வழங்குஞ்செவ் வாய்ச்சி மணிசுறங்கு
மானண்டர் வேயிசை கேட்சப் பொருளிலா வாய்கவைத்த
கானண் டனீயினி னத்தினு முத்திலைக் காமரன்னந்
தானண்ட மென்றனைக் கும்மறைக் காட்டுறை சங்கரனே. ௯௫

சங்க மடங்கலை சூழ்மறைக் காடன் றடஞ்சிலம்பிற்
றுங்க மடங்கலை யன்னார் புரியுஞ்சொற் கூதையென்னேன்
பைங்க மடங்கலைப் பொற்றுட் புறவடிப் பார்வைதக்கோர்
சிங்க மடங்கலை கற்பாரென் முர்பொற் சிலைநுதலே. ௯௬

சிலைக்கோடு மேல்வைத்த கோற்றே னுடைந்தசெந் தேறல்வயற்
றலைக்கோடு வேத வனப்பெரு மான்மலைச் சங்கரிதன்
முலைக்கோடு பட்ட தழும்பான் சடில முடிமணியாங்
[illegible] ௯௭

காரண னேமத் தலைவே திகைமறைக் கானப்பரி
பூரண னேமத்த மானவன் வில்லிடம் பொன்வெள்ளிமா
வாரண சோமத்த வாரணங் காத்திடு மாழிப்புலி
பாரண னேமத்த வேணியைத் தாங்கிய பால்விடையே. ௯௮

பாலம் பகவன் மயிலுரைக் கோவியற் பாவைபங்கன்
றாலம் பகவன் மருப்பினிற் றின்றிடு நாரணனுங்
கோலம் பகவ னவின் மறைக்காட்டன் குருஉச்சடில
மேலம பகவ னெமையாண் டருளுவன் மேதகவே. ௯௯

தகர நகரமுன் றுமைந் தெழுத்தர் தறுகண்முகப்
புகர நகரத் தரவேழப் போர்வையர் பொய்கனலம்
பகர நகரத்தர் வேதங்கள் பூசித்த பான்மைபெற்ற
சிகர நகரத்த ரொற்கலிப் பார்முத்திச் செந்திருவே. ௧௦௦

மறைசையந்தாதி முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

ஆக்கியோன்பெயர்.

செந்தா தியன்மணிப் பூண்புலி யூரற்குச் சேர்ந்தளித்த
சிந்தாத் தியானஞ்செய் வில்லவ தாசன் றிருப்புதல்வ
னந்தா வளந்திகழ் நல்லைச்சின் னத்தம்பி நாவலன்பி
ரந்தாதி மாலையை வேதாட விசற் கணிந்தனனே.